# கரூர் மருத்துவமனையில் துணை முதல்வர் கண்ணீர் அஞ்சலி - ஆறுதல்!









துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.9.2025) கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், மா. சுப்பிரமணியன் எஸ்.எஸ், சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி செ.ஜோதிமணி, கே.என்.அருண்நேரு, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மீ.தங்கவேல், (கரூர்), மாவட்ட ஆட்சித் தலைவர் வே. சரவணன், (திருச்சிராப்பள்ளி), மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், (திண்டுக்கல்) அரசு உயர் அலுவலர்கள், அரசு மருத்துவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வெல்லம் வியாபாரிகள் மரியாதையாக பேசி வியாபாரம் செய்வார்கள்! ஆனால்

## எடப்பாடி பழனிச்சாமி யாரையும் மதிக்காமல் பேசி வருகிறார்!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் காட்டம்!

*அரியலூர்,செப். 30 -*

அரியலூர் மாவட்டம் வாரணாசி அருகே மருதையாற்றின் குறுக்கே ரூபாய் 24,36. கோடி மதிப்பீட்டில் புதிய தடுப்பணை கட்டும் பணியை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவங்கி வைத்தார்.



பின்னர் முதல்வர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களை ஒருமையில் பேசும் எடப்பாடி பழனிச்சாமி குறித்த, செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் சா.சி.சிவசங்கர்,

எடப்பாடி பழனிசாமி அவர்களுடைய தரம் அவ்வளவுதான். அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களே அவரைச் சொல்வார்கள், வெல்லம் வியாபாரி என்று. நாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது என்றுதான் இருந்தோம்.

வெல்லம் வியாபாரம் செய்பவர்கள் எல்லோரும் மரியாதையாக அனைவரிடத்திலும் பேசித்தான், வியாபாரம் செய்வார்கள். ஆனால், இவர் அதைக் கூடச் செய்யாமல் வந்திருப்பார் என்றுதான் தெரிகிறது. யாரையும் மதிக்கின்ற போக்கு இல்லாமல், மிகத் துச்சமாக ஒருமையில் பேசுவது என்பது தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை நாம் பார்த்திராத மிகத் தாழ்வான நிலையாகும். அந்த நிலைக்கு வந்திருக்கின்ற எடப்பாடியை மக்கள் நிச்சயமாக மன்னிக்க மாட்டார்கள். அவருக்கு வருகின்ற 2026 தேர்தலில் மக்கள் நல்ல தீர்ப்பை வழங்குவார்கள் என்று பதிலளித்து பேசினார்.

மேலும், மலைப்பகுதிகளில் பேருந்துகளுக்கு மாற்றாக, வேன் இயக்கும் முடிவைப் போல மற்ற பகுதிகளிலும் வேன் இயக்கப்படுமா? என்ற செய்தியாளரின் கேள்விக்கு... பெரிய பேருந்துகள் இயக்கம் உடைய இடங்களில் அதற்கான மாற்று என்ன செய்யலாம் என்ற ஆய்வு நடைபெறுகிறது. அதிலே ஒரு கட்டமாக அதற்கான அறிவிப்புகள் வருகிறது. அடுத்தடுத்த கட்டங்களில் மேலும் எதிர்பார்க்கலாம் என்று பதிலளித்து சென்றார். அமைச்சர் சா.சி.சிவசங்கர்.




கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசரக்கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தனபால் தலைமையில் மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், மசூது, துரை பிரவீன், கோவை அருண் உள்பட பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கழக வாக்குச் சாவடி முகவர்கள் போர் வீரர்களைப் போன்று களப் பணியாற்ற வேண்டும்!

## வெற்றி என்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்!

### திருச்சி சிவா எம்.பி. பேச்சு!

*திண்டுக்கல், செப். 30 -*

திண்டுக்கல் சட்டப் பேரவைத் தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



தனியார் அரங்கில் நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், அமைச்சருமான அர. சக்கரபாணி தலைமை வகித்தார். கிழக்கு மாவட்டச்செயலாளரும், பழனி சட்டப் பேரவை உறுப்பினருமான இ.பெ. செந்தில்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும், மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா எம்.பி. கலந்து கொண்டு பேசியதாவது:

கழக வாக்குச் சாவடி முகவர்கள் போர் வீரர்களைப் போன்று களப் பணியாற்ற வேண்டும். இயக்கத்தை வெற்றி பெற வைப்பது மட்டுமே ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். இப்போது முதல் தேர்தல் முடியும் வரை அனைவரும் தீவிரமாக களப்பணியாற்ற வேண்டும் என்றார்.

இதில் அமைச்சர் அர. சக்கர பாணி பேசியதாவது: மாவட் டத்திலேயே அதிகபட்சமாகதிண்டுக்கல் தொகுதியில்தான் ஒரு லட்சத்து 7 ஆயிரம் வாக்காளர்கள் கண்டறியப்படாமல் உள்ளனர். பெயர்கள் பட்டியலில் இருந்தாலும், குறிப்பிட்ட விலாசத்தில் அவர்கள் இல்லை. இவர்களில் பலர் விலாசம் மாறியும், சிலர் ஊர் மாறியும் சென்றுவிட்டனர். ஆனால், வாக்காளர் பட்டியலில் இருந்து அவர்களது பெயர்கள் நீக்கப்படவில்லை. இதனால், அவர்கள் தற்போது இருக்கும் தொகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தால், இரட்டை வாக்குப் பதிவு நடக்க வாய்ப்புள்ளது.

எனவே, வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின்போது அனைவரும் கவனமாக இருந்து, வாக்காளர்களை பட்டியலில் சரிபார்க்க வேண்டும். இரட்டை வாக்குப் பதிவுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

திண்டுக்கல் தொகுதியில் உள்ள 7 தொகுதிகளிலும் வெற்றிவாகை சூட வேண்டும். இந்த முறை கண்டிப்பாக திண்டுக்கல் தொகுதியில் நாம் வெற்றி பெறவேண்டும் என்றார்.

கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் பேசுகையில், 'திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அத்தனை தொகுதியையும் வென்றெடுத்து தலைவரிடம் கொண்டுசேர்க்கும் கடமை உங்களுக்கு இருப்பது போல் பொறுப்பாளரான எனக்கும் உண்டு. எனவே, இந்த தேர்தலில் வெற்றி பெற வேண்டியது அவசியம் என்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கிணங்க நேற்று முன்தினம் கரூர் மாவட்டத்தில் தமிழக வெற்றி கழகத்தின் பரப்புரையின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த ரேவதி (வயது 52) , சதீஷ்குமார் (வயது 33) ஆகியோர் பலியாயினர். அவர்களது குடும்பத்திற்கு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார்.. அதுபோது கழக துணை பொது செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.